# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590


## ஆணை நாள். 01.09.2026

## முன்னிலை

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். SA 1997/F/2024

திரு.N.Krishnareddy, -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
தளி ஊராட்சி ஒன்றியம், -- பொது அதிகார அமைப்பு
தளி-635 118,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

******

## இறுதிஆணை

இவ்வாணையம் 27.05.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.T.ஆனந்தராஜ், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(பொது), தளி ஊராட்சி ஒன்றியம், அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் திரு.வெ.பாலாஜி, வட்டார வளர்ச்சி அலுவலர் (ஓய்வு), தளி ஊராட்சி ஒன்றியம், மற்றும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.மணிகண்டன், துணை வட்டார வளர்ச்சி(பொது), தளி ஊராட்சி ஒன்றியம் ஆகியோர்கள் 01.07.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, மனுதாரருக்கு தகவல்கள் ந.க.எண்.2775/2024/அ5, நாள் 23.06.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதனை மனுதாரரும் பெற்றுக்கொண்டு ஏற்பளிப்பு செய்த கடிதத்தின் நகல், அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் மற்றும் அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர்கள் தங்களது எழுத்துமூல விளக்கத்தினை சமர்ப்பிக்க கால அவகாசம் கோரினார்கள். இதனை ஆணையம் பரிசீலனை செய்து விளக்கத்தினை 06.07.2026 அன்று சமர்ப்பிக்க ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.

2. மேற்குறிப்பிடப்பட்ட ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, பொது அதிகார அமைப்பின் சார்பாக அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.மணிகண்டன், துணை வட்டார வளர்ச்சி(பொது), தளி ஊராட்சி ஒன்றியம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் 06.07.2026 அன்று நேரில் ஆஜராகி ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் தனது எழுத்துமூல விளக்கத்தில் மனுதாரரின் மனுவானது மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு முகவரியிட்ட மனு இவ்வலுவலகத்திற்கு கிடைக்கப்பெறவில்லை என்றும், அதனால் தகவல் வழங்க இயலவில்லை என்றும், மனுதாரருக்கு தகவல் நேரில் வழங்கப்பட்டதாகவும், மனுதாரரும் தகவல் திருப்திகரமாக உள்ளது என தெரிவித்து, தனது எழுத்துமூல விளக்கத்தினையும், அப்போதைய மேல்முறையீட்டு அலுவலரின் எழுத்துமூல விளக்கத்திலும் மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனுவானது தங்கள் அலுவலகத்திற்கு கிடைக்கப்பெறவில்லை என்றும், மனுதாரருக்கு தகவல்கள் நேரில் வழங்கப்பட்டுள்ளதாகவும், தெரிவித்த எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்து கீழ்க்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது.

1. **இன்றைய விசாரணையில் அப்போதைய பொதுத் தகவல் அலுவலரின் எழுத்துமூல விளக்கம் மற்றும் அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் ஆகியோர்களின் எழுத்துமூல விளக்கத்தினை ஆணையம் ஏற்கிறது. இருப்பினும், மனுதாரின் 19.12.2023 தேதியிட்ட 6(1)-ன் கீழான தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு மற்றும் 20.01.2024 தேதியிட்ட பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவினை பெற்றும் மனுதாரருக்கு தகவல்களை வழங்காததற்காக அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், மற்றும் அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர்/ மாவட்ட வருவாய் அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகியோர்கள் ஏன் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) மற்றும் 20(2)-ன் கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு 01.09.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் மற்றும் அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகியோர்களுக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. அன்றைய தினம் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களும் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகுமாறு ஆணையத்தால் உத்தரவிடப்பட்டிருந்தது.**

மேற்குறிப்பிடப்பட்ட ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, பொது அதிகார அமைப்பின் சார்பாக அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் திரு.அ.சாதனைக்குறள், (தற்போது துணை ஆணையர், (ஆயம்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர்-641 018 மற்றும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திருமதி.ரா.புஷ்பா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது), கிருஷ்ணகிரி மாவட்டம் (தற்போது தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.எ), தேசிய நெடுஞ்சாலைகள், கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகியோர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, அப்போதைய மேல்முறையீட்டு தனது எழுத்துமூல விளக்கத்தில், தான் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 21.08.2023 முதல் 24.06.2023 மு.ப. வரை மாவட்ட வருவாய் அலுவலராகப் பணிபுரிந்து வந்ததாகவும், மனுதாரர் திரு.கிருஷ்ணா ரெட்டி, என்பவர் 21.01.2024 தேதியிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனு செய்ததாக

ஆணையத்தின் ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் முதல் மேல்முறையீட்டு மனு குறித்து கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரக 2024- ஆம் ஆண்டின் தகவல் அறியும் உரிமைச் சட்ட பதிவேடு மற்றும் கோப்புகளில் பதிவுகள் ஏதுமில்லை என்றும், மனுதாரர் முதல் மேல்முறையீட்டு மனு செய்தது இவ்வலுவலகத்திற்கு வரப்பெற்றிருப்பின் முறையாக பதியப்பட்டு மனுதாரர் கோரும் தகவல்கள் வழங்கப்பட்டிருக்கும், மேலும் மனுதாரருக்கு தகவல்கள் அளிக்கப்பட்டு 24.08.2026 அன்று மனுதாரர் மனநிறைவு கடிதம் அளித்துள்ளதாகத் தெரிவித்து, தான் பணிபுரிந்த காலங்களில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான மனுக்கள் அனைத்திற்கும் எவ்வித காலதாமதமும் இன்றி உரிய முறையில் தகவல் வழங்கியுள்ளேன் என்று தெரிவித்து தனது எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்கிறது. மேலும், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் தனது எழுத்துமூல விளக்கத்தில், மனுதாரரின் 19.12.2023 ஆம் தேதியிட்ட மனு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 21.12.2023 அன்று பெறப்பட்டதாகவும், மனுதாரர் முகவரியில் District Information Officer என குறிப்பிட்டதாலும், மனுதாரர் கோரும் தகவல் வளர்ச்சி பிரிவு சம்மந்தப்பட்டது என்பதாலும் தபால் பிரிவிலிருந்து நேரடியாக AD Panchayat-க்கு அனுப்பப்பட்டு பின்னர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)-வின் கீழ் உள்ள Q- பிரிவில் 08.02.2024 அன்று பெறப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் கோரிய தகவல் தளி வட்டார வளர்ச்சி அலுவலகம் தொடர்புடையது என்பதால் 14.02.2024 தன்னால் கையொப்பம் இடப்பட்டு தளி வட்டார வளர்ச்சி அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(3)-ன் கீழ் மாறுதல் செய்து 21.02.2026 அன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும், ஆணையத்தின் முன் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர்/ துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தளி ஊராட்சி ஒன்றியம்) மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு முகவரியிட்ட மனு கிடைக்க பெறவில்லையென தெரிவித்துள்ளதாகவும், மனுதாரரின் மனு பெறப்பட்டவுடன் உரிய நடவடிக்கைகாக தொடர்புடைய பொதுத் தகவல் அலுவலருக்கு மாறுதல் செய்து அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதன் ஆதாரமான மனுதாரரின் மனு, தளி துணை வட்டார வளர்ச்சி அலுவலருக்கு மாறுதல் செய்து அனுப்பப்பட்ட கடித நகல் மற்றும் அதற்கான அனுப்புகை பதிவேடு நகல் ஆகியவற்றை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்து, ஏற்று, மேல்நடவடிக்கை ஏதுமின்றி, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 1997/F/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
தளி ஊராட்சி ஒன்றியம்,
தளி-635 118, கிருஷ்ணகிரி மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் (19.12.2023 தேதிய),
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் (20.01.2024 தேதிய),**
**மாவட்ட வருவாய் அலுவலர்,**
**கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் (19.12.2023 தேதிய)**
**திரு.மணிகண்டன்,**
**துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(பொது),**
**தளி ஊராட்சி ஒன்றியம்,**
**கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**அப்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலர் (20.01.2024 தேதிய),**
**வட்டார வளர்ச்சி அலுவலர்,**
**தளி ஊராட்சி ஒன்றியம்,**
**கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**மனுதாரர்**

Thiru.N.KrishnaReddy,
78, Thandarai Village,
Panchakshapuram Post,
Denkanikottai Taluk,
Krishnagiri District-635 110.

**நகல்**

உதவி இயக்குநர்,
உதவி இயக்குநர் அலுவலகம்,
தளி ஊராட்சி, கிருஷ்ணகிரி மாவட்டம்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
**சென்னை**-35.(For followup).

Copy to: File NS/PA-